மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களுக்கு எல்லாம் பத்து நிமிடத்திற்கு மேலே பேசுவதற்கு இடம் இல்லை. அப்படிப் பத்து நிமிடங்களுக்கும் மேலாகப் பேசினால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பாக அமைச்சர் அவர்கள் பல விஷயங்களைத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. கணபதியாப் பிள்ளை கீழ்த் தஞ்சை விவசாயிகளின் கூலி உயர்வுக் கோரிக்கை நியாயம் என்று கூறி மிராசுதார்கள் அதைக் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள் . . .

9. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக்குழுவின் கூட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11½ மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டம் பேரவைத் தலைவரின் அறையில் நடைபெறும். அக்குழுவின் உறுப்பினர்கள் அங்கே கூடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

8. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மை தொழிலாளர் சிக்கல்கள் குறித்த திரு. கணபதியாப் பிள்ளை விசாரணைக் (குழுவின் அறிக்கைமீது விவாதம்)—(தொடர்ச்சி).

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : 1944-ஆம் ஆண்டு முதல் இதற்காக விவசாயிகள் நீதி கோரிப் போராடியும், தியாகம் செய்தும், நிலப்பிரபுத்துவத்தினால் வெண்மணி நிகழ்ச்சி ஏற்பட்டதும், சிக்கல் பக்காரி இறந்ததும் இப்படிப்பட்ட கொடுமைகளுக்கெல்லாம் பிறகு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரு கமிஷன் நியமித்திருப்பது பாராட்டத்தக்கது. இருபத்தைந்து வருஷங்களாக விவசாயத் தொழிலாளர்கள் படுகின்ற கஷ்டங்கள் சொல்லும் தரமன்று. பொருளாதார ரீதியாகக் கடைசியிலேயும், உற்பத்திக்கு முதுகெலும்பாகவும் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டும், உழைக்கமுடியாத கூட்டம் அதற்கெதிராகக் கூச்சலிட்டது, அதைக் கேட்கவில்லை. அதற்குப் பிறகு அடைந்த கஷ்டங்களையெல்லாம் பார்த்துத்தான் காலம் சென்ற முதலமைச்சர் அவர்கள் இந்தச் சூழ்நிலையிலே ஒரு கமிஷனை இதற்காக நியமித்தார்கள். இந்த விவசாய அவசரச் சட்டம் போட்டதற்குப் பிறகு அதற்காக நிலப்பிரபுக்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது என்றும்

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)